திருக்குறள் விளக்கும் திங்கள் மலர்.

# குறள் மலர்

விசுவாவசு; ஆடி-ஆவணி இணைப்பிதழ்.

## திருக்குறள்

அறத்துப்பால்

5

இல்லற இயல்.

## இல்வாழ்க்கை

மாலை-1 மலர்-5

பதிப்பாசிரியர் அ. இரத்தினசபாபதி

இராபர்ட்சன்பேட்டை, கோலார் தங்கவயல்.

# மலரைப் பற்றி.

(சென்ற நாலாவது மலரின் தொடர்ச்சி)

15. (க) குறள்மலரைக் கண்டதனுற் கொண்டேன் உவகை
திறமறிந்தே னின்று தெளிந்து.

(உ) வல்லோர் உரைகள் வரைந்தீர் வனப்புறவிங்
கெல்லோரும் காண எடுத்து.

(ஙு) தெளிவுந் திறனுமிகத் தேர்ந்தவரின் வாய்ச்சொற்
களியுவகை யாக்கும் கனிந்து.

(ச) வாழ்வில் ஒளிகூட்ட வந்துலவும் செந்தமிழே!
ஊழிபல வாழி உயர்ந்து.

(ரு) வாழி குறள்மலரே! வண்டமிழ்சேர் கன்னடத்தே
ஏழிசைபோல் வாழி இனிது!

திரு. வித்துவான், சொ. சிங்காரவேலன், எம். ஏ., அவர்கள்
அண்ணுமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணுமலை நகர்.

16. 'குறள் மலர்' எங்கணும் மலர்ந்து மணம் பரப்பி, மக்கள் மனம் நிறைந்து, அறிவுக்கண் திறந்து இறை அன்புக்கு வழி காட்டும் உங்கள் பணிக்கு எங்கள் அன்பு நன்றி உரித்தாகுக.

திரு. சி. வ. கி. இராஜுப் பிள்ளை அவர்கள்
தலைவர், சத்தியஞான சபை,
சின்ன வளவனூர்.

17. "...மிக்க மகிழ்ச்சி! தமிழ் கூறும் நல்லுலகெல்லாம் 'குறள் மலர்' மணம் வீச தமிழ்த்தாய் அருள் செய்ய இறைஞ்சுகின்றேன்.

திரு. வித்துவான், செ. இராசு அவர்கள்
ஈரோடு.

18 "குறள் மலர்" கண்டேன்: அளவிலாப் பெருமகிழ்வெய்தினேன். குறளுக்காகச் செய்யும் இப்பணி மகத்தானது வளர்க! வாழ்க! வெல்க 'குறள் மலர்'ப் பணி.

திரு. குறற்கோமான் அவர்கள்
சேவா ஆசிரமம்,
பெங்களூர்-21.

[பின்பக்க மேலட்டை உட்பக்கம் பார்க்க]

# குறள்மலர்

## திருக்குறள் விளக்கம்

மாலை-1 | விசுவாவசு; ஆடி-ஆவணி | மலர்-5


## ௫. இல்வாழ்க்கை.

1. இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

2. துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.

3. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான்என்றாங்கு
ஐம்புலத்தார் ஓம்பல் தலை.

4. பழிஅஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

5. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

6. அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன்

7. இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாந் தலை.

8. ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.

9. அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.

10. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

ஆசிரியர் குறிப்பு:

# இல்வாழ்க்கை

## (இல்லாளோடு கூடி வாழ்தலினது சிறப்பு)

திருக்குறட் பாயிரம் (முன்னுரை) கடந்த நான்கு அதிகாரங்களோடு முடிந்தது. இனி அறத்துப்பாலில், இல்லற இயல் கூறப்புகும் குறளாசிரியர் 'இல்வாழ்க்கை' என்னும் இவ்வதிகாரத்தோடு அதனைத் தொடங்குகின்றார்.

இருபது அதிகாரங்களை (210 குறட்பாக்களை)க் கொண்டது இல்லற இயற் பகுதி.

இல்லறம் பெரிதா-துறவறம் பெரிதா என எடைபோடவில்லை வள்ளுவர் பெருமான். இதைப் பற்றிக் கருத்து மாறுபாடுகொண்டு வழக்கிட்டுப் பொழுதை வறிதே கழிப்போர் இன்றும் உளர். இது பேதமை.

மனிதன் தானும் வாழ்வாங்கு வாழ்ந்து பிறரையும் அங்ஙனமே வாழவிடும் வழிபற்றியதாகும் வள்ளுவம். இல்வாழ்வானுக்கும் அறம் உரைக்கின்றார்; துறவிகளுக்கும் அறம் மொழிகின்றார் வள்ளுவப் பெருந்தகை. அவர் இல்லறத்தையும் நேசித்தார்; துறவறத்தையும் நேசித்தார்; இவ்விரண்டில் எத்துறை வாழ்வோராயினும் அவர்களுள் மக்கட் பண்பு அற்றவர்களை-அறவழி வழுவியவர்களை-தன் நலமேபேணி பிறர் நலம் மறக்கும் மக்களை மக்களாகவே மதித்தாரில்லை அவர். அறம்தானே அப்பெருமகனாரின் உயிர் மூச்சு!

இல்லறத்தாரும் 'வீடு' பெறவே முயல்கின்றனர் என்பதும், அறத்தினோடு கூடி நடத்தும் இல்லற இயலும் 'வீடு' பேறடைதற்கு முதற்படியே என்பதும், இதன் அடுத்தபடியே துறவறவியல் என்பதுவுமே வள்ளுவம் காட்டும் வழியாகும்.

இல்லறத்தில் தோன்றுகின்ற அன்பு என்னும் அரும்பு, துறவறத்தில் அருளாக மலர்கின்றது. அவ் அருள், அருளாளனாகிய இறைவனருகில் மானிடரை இட்டுச் செல்கின்றது. எனவே, "இயற்கைத் துறவானது இயல்பாக வளரும் இடமாகிய இல்லறத்திற்கே திருவள்ளுவர் ஏற்றம் கூறுகின்றார். பெண்களை இழிவாகப் பேசுகின்றதை அவர் குறளில் எங்கும் கண்டோமில்லை. எனவே; இல்லறம் ஒன்றே இயற்கையோடு இயைந்தது என்பதே திருவள்ளுவரது தீர்ந்த முடிவு" என அறுதியிட்டுக்

கூறுகின்றார் பேராசிரியர், தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள். இதிலுள்ள உண்மை மறுக்க முடியாததாம்.

அறத்துப்பால் அறிவுறுத்தும் வள்ளுவர் பெருமான், அதில் துறவற இயலை முன்னர் கூறி இல்லற இயலைப் பின்னர் கூறாது, இல்லற இயலை முன்வைத்துத் துறவற இயலைப் பின் வைப்பானேன்? இவ்வினாவிற்கு, ''அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும், துறவோர்க்கெதிர் தலுந் தொல்லோர் சிறப்பின், விருந்து எதிர்கோடலும்'' (சிலப்பதிகாரம்) ஆகிய தம் கடமைகளில் தவறாது இல்லறத்தில் நின்று ஐம்புலன்களும் ஆரத்துய்த்து, சிற்றின்பப் பற்று விட்டு, பேரின்பப்பற்றில் அறிவும் அவாவும் தாவ, அந்நிலையில் மேற்கொள்ளப்படும் துறவறமே உறுதியான அடிப்படையின்மீது அமைந்ததாகுமென்பதும், அவ் உறுதியே இறைவன்பால் உயிர்களைச் சேர்க்கவல்லது என்பதும் கருதியே வள்ளுவர் பெருமான் இல்லறத்தை முதற்கண்வைத்து விளக்கியுள்ளார் எனத் திருவெய்திய தமிழ்ப் பேரறிஞர் *மறைமலை* அடிகளார் கூறியதே விடையாம்.

ஆகலின், இவ் இல்வாழ்க்கை அதிகாரத்தின் இறுதிக் குறளாய ''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'' என்பதற்கேற்ப இல்லற வாழ்வு இயங்க வேண்டும் என்பதே முடிபாம். அங்ஙனம் வையத்துள் வாழ்வாங்கு வாழுதல் எங்ஙனம் என்பதை அடுத்துவரும் அதிகாரங்கள் விளக்கக் காண்போம்.

---

## நன்றி

'இல்வாழ்க்கை' என்பது ஆடவர்க்கும் மகளிர்க்கும் பொதுவானது பற்றி இவ் அதிகாரத்திலுள்ள பத்து குறட்பாக்களுக்கும் ஆண்பாற் புலவர்கள் ஐவரும், பெண்பாற் புலவர்கள் ஐவருமாக அரிய உரை தந்தருளியுள்ளனர். இப்புலவர் பெருமக்கள் பதின்மருக்கும் எம் அகங் கனிந்த நன்றி உரித்தாம்.

இனி, அடுத்துவரும் '*வாழ்க்கைத்துணைநலம்*' எனும் அதிகாரப் பாக்கள் பத்தும் வாழ்க்கைத்துணைவியராய பெண்டிரின் சிறப்புப்பற்றிப் பேசுகின்றமையின், அப்பத்து குறட்பாக்களுக்கும் *பத்து பெண்பாற் பண்டிதர்களே* உரைதந்தருளுவர். இது பெறும்வாய்ப்பு! இவ் வாய்ப்பு ''குறள் மலரின்'' அடுத்த வெளியீட்டிற்குக் கிடைத்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாம்.

# இல்வாழ்வான்...

ஆசிரியர், மொ. காளியப்பன் எம். ஏ., பி. டி.,
கழக உயர்நிலைப்பள்ளி, சலகண்டபுரம்.

குறள்-1 இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

சொற்பொருள்:- இல்வாழ்வான் என்பான்-குடும்ப வாழ்க்கை நடத்துபவன் என்று கூறப்படுவான், இயல்புடைய மூவர்க்கும்-அறத்தின் தன்மையையுடைய மூவர்க்கும். நல்லாற்றின் நின்ற துணை-நல்ல வழியில் நிலைபெற்ற துணையாவான்.

கருத்துரை:- இல்வாழ்பவன் அறத்தின் தன்மையுடைய மூவர்க்கும் அவர்கள் நடக்கும் நெறியில் தவறாது நடக்க அவர்களுக்கு நல்ல துணையாவான்.

விளக்கவுரை:- இயல்புடைய மூவர் யார்? அறத்தின் இயல்பை உடைய பிரமசரிய ஒழுக்கம் காப்போன், வனத்திற்குச்சென்று மனையாளுடன் தவம் செய்பவன், முற்றும் துறந்த யோக ஒழுக்கத்தான் ஆகிய மூவரே வள்ளுவர் காட்டும் இயல்புடைய மூவர் என்பார் பரிமேலழகர். மற்ற உரைஆசிரியர்களும் இதனையே குறிப்பர். புலவர் குழந்தை அவர்கள் முற்றும் துறந்தார், ஏழைகள், அனாதைகள் ஆகிய மூவரையும் இயல்புடைய மூவர் என்பார்.

இயல்பு என்பது ஒருவனுக்கு அவன் வாழ்நிலைக்கேற்ப தோன்றும் தன்மையாகும். சினம்கொண்ட ஒருவனைப் பார்த்து இது இவனுக்கு இயல்பு என்போம். பொய்யே பேசுவது ஒருவனுக்கு பழக்கத்தால் இயல்பாகின்றது. அப்படியே ஒழுக்க நெறியில் வாழ்வதும். இங்கு இல்லறம் நடத்துபவனுக்குத்தோன்றும் இயல்பான சூழ்நிலை என்ன? அவனைச் சார்ந்து இருப்பவர்கள் யார்? வயது முதிர்ந்த பெற்றோர், வாழ்வுக்குத் துணையான மனைவி,எதிர்காலச்செல்வமான குழந்தை,மூவரும் இல்லறம் நடத்துபவனுக்கு உரிய தவிர்க்க முடியாத, இயற்கையான, இயல்பான, இயற்கையான அறத்தின் தன்மையுடைய மூவர்கள் என்பதை நன்கு உணரலாம். ஆக இல்வாழ்பவன் பெற்றோர்க்கும், மனைவிக்கும், தன் குழந்தைக்கும் இயல்பான துணையாகி, அவர்கள் முறை கெடாது வாழ உதவும் தூணாவான். துறந்தவர்களையும் மற்றவர்களையும் அடுத்த குறளில் குறிப்பதால் இங்கு குறிப்பிடத்தக்கவர்கள் இம் மூவரே.*

# துறந்தார்க்கும் துவ்வாதார்க்கும்...

திருமதி, கனகசவுந்தரி-இளந்திரையன் எம், ஏ., எம். லிட்.
தமிழ்த்துறை
ஸ்ரீ வெங்கடேஸ்வராக் கல்லூரி, புது தில்லி.

குறள்-2 துறந்தார்க்கும் துவ்வாதார்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.

பொருள்:- இல்வாழ்வான் என்பான்-இல்லறவாழ்வில் ஈடுபட்டுள்ளவனே; துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் துணை-துறவிகள், வறியவர்கள், அனாதைகளாய் இறந்து போனவர்கள்ஆகியோருக்கு உதவுகின்றான்.

கருத்துரை:- உலக இன்பங்களைப்பெறமுடியாமல் துன்பப்படுகிறவர்களுக்கும், உலக இன்பம் வேண்டாம் என்று துறவு மேற்கொண்டவர்களுக்கும், உலகத்தையே விட்டுப்போனவர்களில் சிலருக்கும் இல்வாழ்க்கை நடத்துகின்றவனின் உதவி இன்றியமையாதது.

விளக்க உரை:- இப்பாடல் இல்வாழ்வின் சிறப்பைப் பேசுவதோடு தமிழ் நெஞ்சத்தின் ஒப்புரவு உணர்ச்சியையும் விளக்குகிறது. இல்வாழ்க்கையே சிறந்தது என்று கூறப்புகுந்த வள்ளுவர், அச்சிறப்புக்குக் காரணம் 'அது பிறருக்கு உதவுவதில் முதல் நிற்பதே' என்று குறிக்கிறார். (பரிமேலழகர் முதலிய எல்லா உரையாசிரியர்களும், இக்குறளையும் இதற்கு முந்திய 'இல்வாழ்வான் என்பான்' என்று தொடங்கும் பாடலையும் இவ் அதிகாரத்தின் முதல் இரண்டு பாடல்களாகவே கொண்டிருப்பது அவர்களும் அவ் உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுத்தார்கள் என்பதைக் காட்டுகிறது.) பிறருக்கு உதவுவதையே இல்லறத்தில் சிறப்பாகக் கருதியதற்குப் பல காரணங்கள் உண்டு. முக்கியமாக, இன்லறம் என்பது இரண்டுபேர் ஒன்றுபட்டு, ஒழுங்குபட்டு நடத்துகின்ற வாழ்வு. அதிலே, தாம் பெறுவதை விட மற்றவர்களுக்குக் கொடுப்பதே அதிகம். இந்தப்பயிற்சி உடைய வாழ்வுதான் உலகுக்கெல்லாம் நலன் செய்ய வேண்டும், கைம்மாறு கருதாமல் செய்யவேண்டும் என்னும் இயல்பை உண்டாக்குகிறது. இந்த இயல்பு இல்லாவிடில் சமுதாய வாழ்வே இல்லை.

இதனால்தான் குடும்ப வாழ்வில் பிறருக்கு உதவ வேண்டும் என்னும் கடமைக்குத் தமிழர்கள் முதல் இடமும் முதல் மரியாதையும் கொடுத்தார்கள்.

(இதழ் ஆறில் காண்க)

# தென்புலத்தார்...

திரு. அ. தாமோதரன் எம். ஏ.,
ஆராய்ச்சி மாணவன், மொழியியல் துறை.
கேரளப் பல்கலைக் கழகம், திருவனந்தபுரம்.

குறள்-3 தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்தான் என்றாங்கு
ஐம்புலத்தா றோம்பல் தலை.

பதவுரை:- தென்புலத்தார்-தென்புலம்வாழ் பிதிரர், தெய்வம்-தேவர், விருந்து-விருந்தினர், ஒக்கல்-சுற்றத்தார், தான்-இல்வாழ்வானாகிய தான், என்றாங்கு-என்றிம்முறையால், ஐம்புலத்தாறு-ஐந்திடத்தும் ஆற்றும் நெறியை, ஓம்பல்-வழாது காத்தல், தலை-சிறப்பு.

கருத்துரை:- தென்புலப் பிதிரர், தேவர், விருந்தினர், உறவினர், தான் என்றைவகையாரையும் நெறிநின்று காத்தோம்பல் சிறப்புடைய இல்லறம் என்க.

விளக்கவுரை:- தொல்குடிப்பிறந்திறந்த முன்னோரைப் பிதிரர் என்றும், அப்பிதிரர் கூற்றுவன் திசையாகிய தென்திசைக்கண் இருந்து தம் குடிப்பின்னோர் இறக்கும் கடன்களை ஏற்பர் என்றும் வழங்குதல் தொன்று தொட்டு வரும் மரபு. இது

... ... ... .. ... "பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்" புறம் -- 9

"வணங்கிய சாயல் வணங்கா வாண்மை
இளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணித்
தொல்கட னிறுத்த வெல்போ ரண்ணல்"
பதிற்றுப்பத்து 70

"தென்மலைக் கிழவன் தெய்வம் தென்புல வாணர் ஒக்கல்
தன்மனை விருந்து காத்துத் தருக்கினால் இருக்கும் நாளில்"
திருவிளையாடற்புராணம்

"மின்னார் சடையான் தமராய்த்தவர் வேதச் செல்வர்
தென்னாடர் தெய்வம் விருந்து ஒக்கல் செறிந்து நட்டோர்"
திருவிளையாடற்புராணம்

என்ற இல்வடிகளால் வலியுறுதலைக் காணலாம்.

இத்தொடருக்கு இவ்வாறன்றி, அறிஞர், குருமார், கடல் கொண்ட தென்னக முன்னோர், தமிழர், உயிர் துறக்கும் தறுவாயில் உள்ள முதியவர்கள் என்று வலிந்து பொருள் உரைத்தாரும் உளர். தெய்வம்-வழிபடு தெய்வம். இவர்களைக் காத்தல்-சிறப்பொடு பூசனை செய்து போற்றல். விருந்து-புதியராய் வந்தாரைக் குறித்தது. அவரைக்காத்தல் "சாவா மருந்தெனினும்" "முகனமர்ந்து" கொடுத்துப் பேணுதல். இதனைத் "தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடல்" என்றும், "விருந்து கண்டபோது என்னுறுமோ" என்றும் பிறர் கூறல் காண்க. சுற்றம்-உறவின் முறையார். அவரைக்காத்தல் "இன்பம் விழையாது வினை விழைந்து"

(இதழ் எட்டில் காண்க)

# பழியஞ்சிப் பாத்தூண்...

திருமதி. வரதலட்சுமி—நாகலிங்கம்,
ஆசிரியை, உயர் துவக்கப்பள்ளி, சலகண்டபுரம்.

குறள்-4. பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்.

சொற்பொருள்:- வாழ்க்கை-ஒருவன் மேற்கொள்ளும் இல்வாழ்க்கை; பழி அஞ்சி-பழியை அஞ்சி நல்வழியில் பொருள் சேர்த்து; பாத்து-அப்பொருளைத் தகுதியுடையவர்கட்குப் பங்கிட்டுக்கொடுத்து;ஊன் உடைத் தாயின்-பிறகு எஞ்சியதைத் தான் உண்ணும் தன்மை யுடையதாக இருப்பின்; வழி-அவனுடைய எச்சம்; எஞ்ஞான்றும் எஞ்சல் இல்-உலகத்தில் எப்பொழுதும் அழியாமல் இருக்கும் (என்றும் நிலைத்து நிற்கும்)

கருத்து:- ஒருவன் நல்லவழியில் பொருள் சேர்த்து, அதைத் தக்கவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்து, எஞ்சியதைத் தானும் உண்ணும் வாழ்க்கையை மேற்கொள்ளுவானாயின் அவன் புகழ் என்றும் உலகில் நிலைத்து நிற்கும்.

விளக்கம்:- மக்கள் நல்ல வழியில் பொருள் ஈட்ட வேண்டும் என்பதை வள்ளுவர் எல்லா இடங்களிலும் வற்புறுத்துகின்றார். தற்காலத்தில் மக்கள் எவ்வாற்றேனும் பொருள் சேர்த்தால் போதும் என்று பல இழிசெயல்கள்செய்து பொருள் ஈட்டுதலைக் காண்கின்றோம். இவ்வாறான இழிசெயல் செய்து ஈட்டுதல் கூடாது என்பதனைப் 'பழி அஞ்சி' என்கிறார். மேலும் அறமல்லாத மற வழியில் பொருள் சேர்த்து அப்பொருளைப் பிறர்க்கு ஒருவன் ஈவானே யாகில், பொருள் பெறுபவனிடத்தில் அறமும் பொருளைக்கொடுப்பவனிடத்தில் பாவமும் சேர்ந்துவிடும்என்று எச்சரிக்கைச் செய்வதற்காகவும் அவ்வாறு கூறுகிறார்.

பிறகு ஈட்டிய பொருளைத் தக்கார்க்குப் பங்கிடுதல் என்பது 'இயல்புடைய மூவருக்கும் தென்புலத்தார் முதலிய நால்வருக்கும் பங்கிடுதலாம். அவ்வாறு பகிர்ந்து அளித்ததுபோக மீதியைத் தான் உண்ணல் வேண்டும் என்கிறார். அவ்வாறு உண்ணுகின்றவர்களை விருந்தோம்பல் என்னும் அதிகாரத்தில்,

'வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்' எனச் சிறப்பிக்கின்றார்.

இவ்வாறு இல்வாழ்க்கை மேற்கொள்ளும் ஒருவன் இறந்த பின்னரும் அவனுடை எச்சம் நிலைத்து நிற்கும் என்கிறார். எஞ்சுவது எச்சம்; தனக்குப்பின் தான் விட்டுச் செல்கின்ற மக்கள், புகழ் முதலியனவாகும். ஆகவே இறந்த பின்னரும் அவன் புகழ் உலகில் சிறந்தோங்கும் என்பது தெளிவு.

இலக்கணக் குறிப்பு:- பழி அஞ்சி என்னும் வேற்றுமைத் தொகை இருபொருள் கொள்ளும், (பழியை அஞ்சி, பழியின் அஞ்சி)

'அச்சக் கிளவிக்கு ஐந்தும் இரண்டும்
எச்சம் இலவே பொருள்வயினான' என்பது தொல்காப்பியம்.●

# அன்பும் அறனும்...

திரு. சாலை-இளந்திரையன் எம். ஏ., எம். லிட்.,
தமிழ்த்துறை,
தில்லிப் பல்கலைக் கழகம், தில்லி.

**குறள்-5** அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

**பொருள்:-** ஒருவர் மீது ஒருவர் அன்பு கொண்ட கணவனும் மனைவியும் நடத்தும் வாழ்க்கையே இல்வாழ்க்கை; அவ்வாழ்க்கையே, உலகப் பிறருக்கு வேண்டிய இடத்தில் வேண்டிய உதவிகளைச் செய்து அவர்களை மகிழ்த்தி இவர்களும் மகிழும் நல்வாழ்க்கை.

**கருத்து:-** அன்பின் மேல் (காதலின் மேல்) அமைகின்ற குடும்ப வாழ்வே சிறந்தது; அதுவே அறம் உடைய வாழ்வாகச் செழிக்கிறது.

**விளக்கம்:-** சிறந்த இல்வாழ்க்கை எப்படி அமைந்திருக்கும்? அன்பும், பிறருக்கு உதவி அவர்களோடு இனம் பொருந்தி வாழ்தலாகிய அறமும் உடையதாக இருக்கும்...அப்படி அமைந்த இல்வாழ்வின் பயன் யாது? அன்பும் அறமும் உடையதாக இருப்பதுதான் அதன் பயன்.

சித்திரக்கவிபோல உள்ள இந்தக் கருத்துக்குச் சிறிதே விளக்கம் தேவை. மழைக்கு இயல்பு என்ன? மழை பெய்வதே அதன் இயல்பு. அதன் பயன் என்ன? பயிர் பச்சை வளர்ந்து செழிக்கும்; விளைவு பெருகும்;- உலக மக்களும் பிற உயிர்களும் மகிழ்வார்கள். ஆனால் இவைகளால் மழைக்கு என்ன பயன்? நேரடியாகப் பார்த்தால், ஒருபயனும் இல்லை.

ஆயினும், ஒரு முறை மழை பெய்வதே குளம் குட்டைகள் நிரம்பவும், பயிர்ப்பச்சைகள் செழிக்கவும், அதன் மூலம் மீண்டும் மழைமுகில் உற்பத்தியாகி மழைபொழியவும் காரணமாகிறது. இந்த முடிவற்ற வட்டத்தில் எது இயல்பு? எது பயன்? மழை பெய்வதே மழைமுகிலின் இயல்பு; அப்படிப் பெய்வதனால்தான் மீண்டும் மழை உண்டாக முடிகிறது. ஆதலால், பெய்வதும் பெய்து உயிரையும் உலகையும் செழிப்பாக்குவதும், அவைகளின் மூலமே தன்னை வளர்த்துக் கொள்ளுவதும் ஆகிய எல்லாம் மழையின் இயல்புகளே; எல்லாம் மழையின் பயன்களே;- இயல்பு இது, பயன் இது என்று பிரித்து அறிய முடியாது.

இல்வாழ்க்கைக்கு வந்தால், அன்புடையவர்களாக இருப்பது இல்லறத்தார்க்கு இருக்க வேண்டிய இயல்பு; அதன் பயனாகப் பிறருக்கு இன்பம் ஏற்படுதலாகிய அறம் விளைவதும் அதன் இயல்பு; அவ்அறத்தினால் இல்லறத்தார் அன்புடையவர்களாக வாழ்வதில் மேலும் ஊக்கம் கொள்ளுவது இயல்பு. தெளிவாகச் சொன்னால்,

> "இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்
> அறவிலை வாணிகன் ஆய் அ(ல்)லன்..."

என்று ஆயைப் பாராட்டிய தமிழ்க் கருத்தே இதனுள் மறைந்திருக்கிறது. அன்புக்காகவே அன்பு செய்வது இல்லறம்; அந்த இல்லறம் நல்லறமாக விளங்குவது திண்ணம். இதுதான் இப்பாடல் நமக்கு நல்கும் செய்தி.*

# அறத்தாற்றின்...

திருவாட்டி; இராச. சிவானந்தவல்லி. எம். ஏ.,
பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்,
நிர்மலா மகளிர் கல்லூரி. கோயம்புத்தூர்.

குறள்-6 அறத்தாற்றின் இல்வாழ்கை ஆற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்.

சொற்பொருள்:- அறத்து ஆற்றின் = அறநெறியினை மேற்கொண்டு; இல்வாழ்க்கை = இல்லற வாழ்க்கையினை; ஆற்றின் = ஒருவன் நடத்துவானேயானால்; புறத்து ஆற்றின் — அவன் இல்லறத்திற்கு வேறான நெறியினை; போய் = ஏற்று நடந்து; பெறுவது எவன் = பெறக்கூடிய நன்மை என்ன உள்ளது. (ஒன்றுமில்லை)

இல்வாழ்க்கைக்குரிய அறநெறி யாது? துறவிகள் வறுமையடைந்தோர், உறவினரின்றி இறந்து போனவர்கள் ஆகியவர்களுக்குத் துணையாக இருகக வேண்டும்; உறவினர், அயலார், நண்பர் என்றவேறுபாடு இல்லாமல் எல்லாரிடத்தும் அன்பு செய்ய வேண்டும்; நல்ல வழியில் ஈட்டிய பொருள் குறைந்த அளவேயானாலும், அதனைத் தனக்கே வைத்துக் கொள்ளாமல் பகுத்து உண்ணுவது ஆகியவை இல்வாழ்க்கைக்கு வகுக்கப்பட்ட செம்மையான சிறந்த நெறிகளாம். இந்த நெறிகளை மேற் கொண்டு இல்வாழ்க்கையை நடத்துபவன் பெறுதற்குரிய அரிய பேறுகளையெல்லாம் எளிதில் பெறுவான். அவன் நல்ல பேறுகளை அடைவதற்கு வேறு எந்த வித நெறியையும் பின்பற்ற வேண்டுவதில்லை என்பது விளக்கம்.

கருத்துரை:- ஒருவன் நெறிதவறாத இல்வாழ்க்கையை மேற்கொண்டால் அது ஒன்றே அவனுக்கு யாவற்றிலும் சிறந்த வீடு பேற்றினை நல்கும். *

---

(இதழ் இரண்டின் தொடர்ச்சி)

"ஈதல் இசைபட வாழ்தல் அது வல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு"

என்று பிறிதோர் இடத்தில் வரையறுக்கிறது வள்ளுவம்.

எனவே, இக்குறளில் கூறப்பட்டுள்ளது இல்வாழ்வின் பெருமை மட்டுமல்ல; (பட்டாளத்திற்கு ஆள் எடுக்கும் போது உயரம், பருமன், எடை முதலியன பார்ப்பது போல) "நீ இல்லறம் நடத்த விரும்பினால் இந்தக் கடமைகளை நிறைவேற்றும் தகுதி உனக்கு இருக்க வேண்டும்" என்றும் ஒவ்வோர் இளைஞனுக்கும், இளம் பெண்ணுக்கும் முன்னறிவிப்பு விடுகிறது இக்குறள். அதனால்தானே திருக்குறளை "வாழ்க்கை நூல்" என்கிறோம்? *

# இயல்பினான்...

திரு. இரா. நடராசன் எம். ஏ. எம். லிட்.
முதனிலைக் கல்லூரி. உரிகம். கோலார் தங்கவயல்.

குறள்-7 இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.

பதவுரை:- இல்வாழ்க்கை= இல்வாழ்க்கைக்கண்; இயல்பினான்= அதற்குரிய இயல்புடன்; வாழ்பவன் என்பான்= வாழ்பவன் என்று சொல்லப்படுவான்; முயல்வாருள் எல்லாம்= புலன்களைவிட முயல்வார் எல்லாருள்ளும்; தலை= தலையாயவன்.

கருத்துரை: இல்வாழ்க்கைக்கண் அதற்குரிய இயல்புடன் பொருந்தி வாழ்பவன், புலன்களை விட முயல்வார் எல்லாருள்ளும் மேம்பட்டவன்.

விரிவுரை:- இங்கு 'இல்வாழ்க்கைக்கு உரிய இயல்பு' என்பது தலைவனும் தலைவியும் இன்ப துன்பங்களை ஒன்றாய் ஏற்றுக்கொண்டு, ஒருவர் ஒருவரில் கலந்த உண்மையுடன் வாழும் இயல்பு. இதனைச் சங்க இலக்கியத்தில் "இருதலைப் புள்ளின் ஓருயிர்த்தாய் இயந்த கேண்மை" என்று குறிப்பிடுவர் சிவப்பிரகாசரும், "கண்கள் இரண்டும் ஒன்றையே நோக்குவது போன்று காதல் மனையாளும் காதலனும் மாறின்றித் தீதில் கருமம் இயற்றவேண்டும்" என்பர், "காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்" என்று ஔவையார் அருளியிருப்பதை நாம் அறிவோம். இல்வாழ்வோரின் கடமைகள் பற்றி சுவாமி விவேகானந்தர் அருளியவற்றை, சுவாமி விபுலானந்தர் "ஈன்றோர்ப் பேணி" எனத் தொடங்கும் பாட்டாக மொழிபெயர்த்துள்ளார்.

முற்றத்துறந்தாரை விட்டமையின் 'முயல்வார்' என்றது, மூன்றாவதாகிய வனத்துச் செல்லும் நிலையில் நின்றாரை என்று பரிமேலழகர் பகர்கின்றார். துறவறவியலில் துறவறத்தைச் சிறப்பித்துக் கூறும் கருத்துக்களையும், ஈண்டு இல்வாழ்க்கையைச் சிறப்பித்துக் கூறும் கருத்துக்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, வள்ளுவர் "தத்தம் நிலையில் வழுவாது ஒழுகின் தாம் பெரியரே" என்ற கருத்தினை உடையவர் என்பது விளங்கும்.

எவ்வாறேனும் இக்குறளினால் புலன் ஒடுக்கத்தை விடப் புலன் அடக்கத்தையே வள்ளுவர் ஆதரிக்கின்றார் என்பது புலனாகும். திருமூலரும் "அஞ்சும் அடக்கடக் கென்பர் அறிவிலார்" என்று அருளியுள்ளார். ஐம்புல இன்பங்களையும் அறநெறி வழுவாது நுகர்வதில் எந்தத் தவறுமில்லை. புலன்களை அடக்கி நெறி தவறாமல் இன்பம் துய்க்கும் இல்வாழ்வோர் புலன்களை ஒடுக்க முயல்பவரைவிட உயர்ந்தவர் என்பதற்கு ஐயமே இல்லை. 'சிவஞான சித்தியார்' செப்புகின்றது:

"நாடுகளில் புக்குழன்றும் காடுகளில் சரித்தும்
நாகமுழை புக்கிருந்தும் தாகமுதல் தவிர்ந்தும்
நீடுபல காலங்கள் நித்தரா யிருந்தும்
நின்மலஞா னத்தையில்லார் நிகழ்ந்திடுவர் பிறப்பில்
ஏடுதரு மலர்க்குழலார் முலைத்தலைக்கே இடைக்கே
எறிவிழியின் படுகடைக்கே கிடந்தும் இறைஞானம்
கூடுமவர் கூடரிய வீடும் கூடிக்
குஞ்சித்த சேவடியும் கும்பிட்டே இருப்பர்" *

# ஆற்றின் ஒழுக்கி...

திருவாட்டி, தே. தியாகராசன் எம். ஏ.,
தமிழ்ப் பேராசிரியர், டோக் பெருமாட்டி கல்லூரி. மதுரை-2.

குறள்-8 ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து.

ஆற்றின்-இயலுமேல்; ஒழுக்கி-பிறரை ஒழுங்காக நடக்கச் செய்து; அறன்-(பிறரை ஒழுங்காக நடக்க வைக்கத் தூண்டுதலாகத் தன் வாழ்க்கையில்) அறத்தினின்றும்; இழுக்கா-(மிக இடுக்கண் நேரினும்) தவறாத; இல்வாழ்க்கை-ஒருவனது இல்வாழ்க்கையானது; நோற்பாரின்-மிக வருந்தித் தவமியற்றுவாரின் நிலையிலும்; நோன்மை-ஆற்றல்; உடைத்து-பெற்றது.

விளக்கவுரை:- இல்வாழ்வான் நன்னெறியில் நடப்பது கடினம். பிறனை ஒழுங்கிற்குக் கொண்டுவர இவனுக்குத் தகுதி வேண்டும். அதனால் அவனுக்கு இயன்றால் பிறனை ஒழுங்காக நடக்கச் செய்யலாம். பிறனை நன்னெறியில் நடக்கச்செய்யத் தான் நன்னெறி தவறாதிருக்க வேண்டிய நிலை வரும். அக்கால அவனுக்கு நேரும் இடர்ப்பாடுகள் பலப்பல. எத்தகைத் துன்பங்களையும் வென்று அறத்தொடு மாறுபடாத அவன் இல்வாழ்க்கை தவமியற்றுவோர் நிலையைவிட ஆற்றலுடைத்தாகும்.*

---

(இதழ் மூன்றின் தொடர்ச்சி)

"தன் கேளிர் துன்பம் துடைத்தூன்றும் தூண்"போல் நிற்றல். தன்னைக் காத்தலாவது:"பழியஞ்சி" அறனிழுக்கா இல்வாழ்க்கை"யை உடையனாதல். அனைத்தறங்களும் இடையறாது நடத்தற்குரிய தன்னை ஓம்புதலும் அறனாயிற்று. ஐம்புலத்தும் அறநெறியாற்ற ஐங்கூறு வகுத்து அரசிறை ஆறிலொன்றாக அமைத்த முறை கருதற்குரியது.

தன்னையேஓம்புதல் கடையாய இல்லறம் என்பதும். ஐம்புலத்துள் ஒன்றிரண்டு ஒழியவோ, முறை பிறழ்ந்தோ,நெறி இறந்தோ ஓம்புதல் இடையாய இல்லறம் என்பதும், பிதிரர், தேவர், விருந்தினர், உறவினர், தான் என்றைவகையாரையும் இம்முறையே நெறிநின்று காத்தல் தலையாய இல்லறம் என்பதும் "தலை" என்பதனால் பெறப்பட்டன.

இலக்கணக் குறிப்பு:- தெய்வம் என்றது சாதியொருமை. விருந்து, ஒக்கல், தலை என்பன ஆகுபெயர்கள். முற்றும்மை குறைந்து ஐம்புலத்து என நின்றது.இனி,என்றாங்கு என்பதனை என்ற,+ஆங்கு எனப்பிரித்து, பெயரெச்சத்து ஈற்றகரம் தொக்கது என்றும், ஆங்கு என்பது அசை நிலை என்றுரைத்தலும் ஒன்று. மேலும் அதனை என்று+ஆங்கு எனப் பிரித்து என்று என்பது எண்ணிடைச்சொல் என்றும், ஆங்கு என்பதற்கு ஆங்கே சொல்லப்பட்ட என்றுசொல்லெச்சம் வருவித்துப் பொருள் காணலும் உண்டு.

பாடபேதம்:- "ஐம்புலத்தார் ஓம்பல் தலை" என்பது மணக்குடவர் பாடம்.*

# அறனெப்பட்டதே..

திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி எம். ஏ., எல். டி., பி. ஓ. எல்.,
பேராசிரியர், மதுரைக் கல்லூரி, மதுரை.

குறள்-9 அறன்எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று

சொற்பொருள்:- அறன்எனப்பட்டது-அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது; இல்வாழ்க்கையே-இல்லாளோடு கூடி வாழும் சிறப்பேயாகும்: அஃதும்-துறவறமாகிய மற்றொன்றும்; பிறன்பழிப்பது இல்லாயின்-பிறரால் பழிக்கப்படும் தீய ஒழுக்கங்கள் இல்லாதிருந்தால்; நன்று-(இல்வாழ்க்கை போல) நல்லதாகும்.

கருத்து:- இல்லறம், துறவறம் ஆகிய இரண்டனுள் இல்லறமே நல்லது.

விளக்கவுரை:- பிறர் பழிக்கும் தீய ஒழுக்கங்களான துறவத்திற்கு ஏலாத் கூடாவொழுக்கம் அவை; கள்ளல், பொய்த்தல், வெகுளல், கொல்லல், ஊறு செய்தல் முதலியன. துறவறத்தில் மனத்தையும் பொறிகளையும் ஒறுத்து அடக்கவேண்டும், அஃது அரிய செயல். இல்லறத்திலோ, ஐம்புலன் இன்பங்களை நிரம்பத் துய்த்து இன்புற்று இருக்கலாம். அஃது எளிய தன்மையுடையது. இவ்விரண்டும் 'அறம்' என ஒன்றாக எண்ணப்படினும், துறவறம் ஐம்புலனை அடக்கும் அரிய தன்மையுடைத்தாகலின், அதனைவிட எளியதன்மையுடைய இல்லறமே நல்லது.

இனி இக்குறளில் 'அஃதும்' என்பதற்கு 'அவ்வில்லறந்தானும்' என்று பொருள் கொண்டு, 'பிறன் பழிப்பதில்லாயின்' என்பதற்கு, 'பிறன் இல் விழைதல் ஆகிய பிறரால் பழிக்கப்படும் குற்றம்'-என்று பொருள் கொள்வதும் பொருந்தும். இல்லறத்தில் பிறர் பழிக்கும் குற்றங்கள் மற்றும் சிலவுள. அவை; அழுக்காறு கொள்ளல், வெஃகல், (பிறர் பொருளைக் கைப்பற்ற விரும்புதல்) புறங்கூறல், பயனில சொல்லல், தீவினை செய்தல் முதலியன. இவை இல்லாத இல்வாழ்க்கையே நல்லது என்பது கருத்து.

துறவறத்திற்குக் கூடா ஒழுக்கமாவது: துறவு எனும் போர்வையில், அல்லது வேடத்தில் மறைந்து தகாத செயல்களைச் செய்தல். பசுவானது புலித்தோலைப் போர்த்துக்கொண்டு மேய்வதுபோலத் தன் வேடத்தைக் கண்டு பிறர் அஞ்சுவர் என்ற எண்ணத்தால், தகாத ஒழுக்கங்களை மேற்கொண்டு நடத்தலாகாது. அன்றியும், அவ்வேடத்தில் இருந்துகொண்டு தீய ஒழுக்கங்களைக் கடைப்பிடிப்பது. வேடுவன் புதரின் பின்னால் மறைந்திருந்து பறவைகளை வலையினுற் பிடிக்கும் தீய செயலுக்கு ஒப்பாகும்.

எனவே, தவவேடத்திற்கேற்ப நடக்கலாற்றுதவர்களுக்கு இல்லறமே சாலும். இல்லறத்தினாலும் துறவறத்தால் எய்தும் பயன் கிட்டும். இரண்டும் மோட்சத்திற்கு ஒற்ற நெறிகளே. திருவள்ளுவருடைய இல்வாழ்க்கையே இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். *

# வையத்துள் வாழ்வாங்கு...

திருமதி. வ. பா. தாமரைக்கண்ணி அம்மையார்,
(மாணவர் மன்ற-முன்னுள் தலைவியார்) சென்னை-1.

குறள்-10 வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

சொற்பொருள்:- வாழ்வாங்கு-இல்லறத்தோடு கூடி வாழும் இயல்பினால்; வையத்துள்-இவ்வுலகத்தில்; வாழ்பவன்-வாழ்கின்றவன்; வானுரையும் தெய்வத்துள்-இவ்வுலகத்தானே எனினும் வானுலகத்தில் உள்ள தெய்வ முறையில்; வைக்கப்படும்-வைத்து நன்கு மதிக்கப் படுவான்.

விளக்கவுரையும் சிறப்புக் கருத்துக்களும்:

வாழ்க்கை என்பதே இல்வாழ்க்கையொழியப் பிறிதில்லை எனக் குறளாசிரியர் துணிபாம் என்பது, அவர் இக்குறளை 'இல்வாழ்க்கை' என்னும் அதிகாரத்தில் இறுதியாக வைத்ததிலிருந்தே தெரியவரும்.

தெய்வத்துள் வைக்கப்படலாவது. கண்ணகி முதலியோர் போல வானவர்க்கு விருந்தாகி அவர் வழிபட நிற்றல்; தெய்வம் போலப்புகழும் பூசையும் பெறல்; எல்லா உயிரும் தொழ நிற்றல். மற்றும், இவ் அதிகாரத்தின் 3-ஆவது குறளில் கூறியாங்கு, இல்லத்தாரால் தென்புலத்தார்க்கு அடுத்த தெய்வமாகக் கருதப்படுதல். இப்போதே தெய்வமாக மதிக்கப்படுபவன் பின்னர் தேவனாகி அறப்பயன் நுகர்தல் ஒரு தலையாகலின், நெறி திறம்பா இல்வாழ்க்கையின் மறுமைப் பயன் கூறப்பட்டது.

"வசைஒழிய வாழ்வாரே வாழ்வார்; இசைஒழிய
வாழ்வாரே வாழா தவர்" —(குறள்-240)

என்னுங் குறட்பாவினால். இல்வாழ்க்கையின் இம்மைப்பயன் 'புகழ்' என்பது பெறப்பட்டது.

இக்குறள் வெண்பா பலவகை யானும் சிறப்புடையது. வள்ளுவனார் தமது நூலில் மிக நுணுக்கமாகக் கையாளும் உத்திகள் (Techniques) பலவற்றை இக்குறளில் காணலாம்.

முதற்கண்; இக்குறள் ஆடவரைச் சுட்டியதெனினும், மகளிர்க்கும்-உண்மையில் மகளிர்க்கே-பொருந்தும் என்பதை, அடுத்து வரும் 'வாழ்க்கைத் துணைநலம்' அதிகாரத்தினின்றுந் தெரிந்து கொள்ளலாம்

(தொடர்ச்சி பின்பக்கம்)

(இதழ் பத்தின் தொடர்ச்சி)

இரண்டாவதாக; 'குறள் மலர்' ஆசிரியர் முன்பொருகால் (மாலை-1 மலர்-2 பக்கம்-1) தெரிவித்தது போல், ''ஒவ்வோர் அதிகாரத்தின் கடைசிக் குறளின் திரண்ட கருத்து அதற்கடுத்த அதிகாரத்தின் கருத்தோடு தொடர்பு கொண்டிருக்கும்'' என்னும் பொதுவிதிக்கு இக்குறள் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. வாழ்க்கைத் துணை நலமாய மைந்த ஒரு பெண் வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவளாக அமைந்து விட்டால், அப்பெண்ணிற பெருந்தக்கயாவுள? என வள்ளுவர் 54-ஆவது குறளில் கேட்கிறார். 'இல்லை' என்பதுதான் அவ்வினாவிற்கு விடை.*

## இல்வாழ்க்கையே நல்ல வாழ்க்கை.

எடுப்பு.

இல்வாழ்க்கையே நல்லவாழ்க்கை
இன்பத்துள் இன்பம் அன்பினுக்கன்பான. (இல்)

தொடுப்பு.

செல்வாக்கின் அறவாழ்க்கை துறவோர்க்கும் துணையாகி
எல்லோர்க்கும் சுகவாழ்வை இனிதாக்க வல்லதான. (இல்)

முடிப்பு.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றுங்கு
ஐம்புலத்தா ரோம்பல் தலையாய கடனே.

முடுகு.

தென்புலத்தார் தெய்வம்—
மனதினில் உறுதியின் கனலொடு வழிபடும் (தென்)

அறத்தாறதும் புறத்தாறதும் தெளிந்துடன்
பழிப்பானதை வெறுப்பாரது தொடர்புடனே (தென்)

வாழ்விலும் தாழ்விலும் நிறைமன தொடுவரும்
நோன்பிலும் நொடியிலும் குறையறு நலமருள் (தென்)

தொடுப்புத் துணை.

மன்பதைக் கொளிகாட்டி மனவிருள் தனையோட்டி
வன்புடனும் வசைபோக்கி தென்புடனே திருவளர்க்கும். (இல்)

—ப. கண்ணன்.

(மேலட்டை இரண்டாம் பக்கத்தின் தொடர்ச்சி)

19. ''...'குறள் மலரை' நுகர்ந்து நுகர்ந்து சுவைத்துக் கொண்டேயிருக்கின்றேன். மலரில், ஒரு அதிகாரத்திற்கு, ஒரு குறளுக்கு ஒரு தமிழறிஞர் வீதம் பத்து அறிஞர் பெருந்தகையார்கள் எளிய இனிய விளக்கம் தருகின்றனர். இஃது செயற்கரிய பெருஞ்செயலேயாகும். மாணவரும் மற்றோரும் நல்வழியில் செல்வதற்கு வழிகாட்டியாக விளங்கும் 'குறள் மலர்' மலர்ந்து மானிலமெங்கும் மணம் வீசட்டும்''

திரு. தச்சை, இரா. சங்கரலிங்கம் அவர்கள்
எழுத்தாளர், பேரறிஞர்; மு. வ. இல்லம்,
தச்சநல்லூர், திருநெல்வேலி.

20. 'குறள் மலர்' வெளியீட்டு முயற்சியைப் பாராட்டுகின்றோம். மலர் சிறந்து மணம் வீச தமிழ்த்தாயின் தண்ணருளைப் போற்றுகின்றோம்''

திரு. கி. சந்தானம் அவர்கள்
செயலாளர், பெங்களூர்த் தமிழ்ச்சங்கம்,
பெங்களூர்.

21. ...'குறள் மலர்'ப் பணி வெல்க. பலருக்கும் பெருநலம் பயக்கத் தக்கதாக இம்முயற்சி இருப்பதறிய மகிழ்ச்சி. மலர்ப்பணி சிறக்க என்றும் எனது ஒத்துழைப்புண்டு.

திருவாட்டி; கேப்டன், தி. கி. நாகாம்பாள் எம். ஏ., அவர்கள்
தமிழ்த்துறைத் தலைவர்,
சென்டிரல் கல்லூரி, பெங்களூர்.


## சாலை இளந்திரையன் நூல்கள்:

| | |
|---|---|
| இளந்திரையன் கவிதைகள் | 3—25 |
| அன்னை நீ ஆடவேண்டும் | 3—00 |
| சிலம்பின் சிறுநகை | 1—50 |
| உலகம் ஒரு குடும்பம் | 3—00 |
| புரட்சிக் கவிஞர் கவிதைவளம் | 5—00 |
| இரண்டு குரல்கள் | 3—00 |
| தமிழ்க் கனிகள் | 3—00 |

கிடைக்குமிடம்:

சாலை வெளியீடு,
3362/1, கிறிஸ்டியன் காலனி, தில்லி-5.

# தமிழ்ப் பழமொழியும், ஆங்கில மொழிபெயர்ப்பும்.

தமிழன்பர்களே!

வணக்கம். நம் மொழியில் சிறந்த கருத்துக் கருவூலமாகவும் மக்கள் இலக்கியமாகவும் அமைந்திருப்பது பழமொழி. ஒவ்வொரு தமிழ்ப் பழமொழியும் நீண்ட அனுபவத்தின் அடிப்படையில் எழுந்தது என்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ, மறக்கவோ முடியாது. எதுகை மோனை நயம்பட அமைந்த தமிழ்ப் பழமொழிகள் செவிக்கு இன்பம் நல்கி, சிந்தைக்கு விருந்தளித்த வண்ணமிருக்கின்றன. இத்தகைய பழமொழிகளில் அமைந்துள்ள ஆழ்ந்த கருத்துக்களை உலகத்திற்கு எடுத்துணர்த்த வேண்டியது தமிழர் தம் தலையாய கடமையாகும். கோலார் தங்கவயல் தமிழ்ப் பேராசிரியர், **திரு. வ. பெருமாள்** அவர்கள் இப்பெரு முயற்சியை மேற்கொண்டு, தமிழ்ப் பழமொழிகளை உலக மொழியாம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கத் திட்டமிட்டுள்ளார்கள் எனபதை நாம் பெருமகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம். அவர் தம் சீரிய முயற்சி வெற்றிபெற உங்கள் ஒத்துழைப்புத் தேவை என்பது சொல்லாமலே விளங்கும். 'பலதுளி பெருவெள்ளம்' என்னும் பழமொழிக்கேற்ப நீங்கள் அனைவரும் உங்களால் இயன்ற அளவிற்குத் தமிழ்ப் பழமொழிகளைத் தொகுத்து அவர்கட்கு அனுப்பி உதவினால், அவர் மேற்கொண்டுள்ள தமிழ்த் தொண்டிற்குப் பெருந்துணை புரிந்தவர்கள் ஆவீர்கள். நீங்கள் அனுப்பும் ஒவ்வொரு பழமொழியும் ஆழ்ந்த நன்றியுடனும், பெருமகிழ்ச்சியுடனும் பெற்றுக் கொள்ளப்படும்.

பழமொழிகள் அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:-

**பேராசிரியர், வ. பெருமாள்,**
எம். ஏ. பி. டி., எம். ஆர். ஏ. எஸ்.,
முதல்நிலைக் கல்லூரி, உரிகம்,
கோலார் தங்கவயல் [K. G. F.]
மைசூர் மாநிலம்.
ஆசிரியர் 'குறள் மலர்'

செந்தமிழ் அச்சகம், சலகண்ட புரம். சேலம் மாவட்டம்.